# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 05 வியாழக்கிழமை 12.09.2024 கதிர் 359







# கஜேந்திரன் கைதாகி விடுதலை! துண்டுப்பிரசுரங்களும் பறிமுதல்

## கிளிநொச்சியில் இன்று பொலிஸார் அதிரடி



தேர்தலைப் புறக்கணிக்குமாறு பிரச்சாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சியில் இன்று துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்துள்ளனர்.

6➤

# தமிழரசை நம்பியருந்தோருக்கு சாட்டை அடித்தான் கிடைத்தது

## அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு



நாட்டில் பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

பல்வேறுபட்ட நெருக்கடியில் இருந்த நாட்டினை மீட்டு தற்போது உள்ள நிலைக்கு கொண்டு வந்தவர் ரணில் விக்ரமசிங்க. எனவே அவருக்கே வாக்களிக்க வேண்டும் என்று இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர் தமிழரசுக் கட்சி நிலைப்பாடு தொடர்பிலே எழுப்பப்பட்ட கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார்.

தமிழரசை கட்சியை நம்பிருந்த மக்களுக்கு தமிழரசு கட்சியினர் செருப்படி வழங்கியிருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாத பல்வேறு குழப்ப நிலைக்கு சென்றுள்ளார்கள் இதனால் ஜனாதிபதியை ஆதரிப்பது தொடர்பிலே பல்வேறு குழப்பம் இல்லை வருகிறது என்றும் அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தார்.

மேலும் ரணில் விக்ரமசிங்க நாட்டிலே 6➤

# புதிதாக அமையும் அரசுடன் பேசுவதற்கு ஐ.எம்.எப். தயார்

## இயக்குநர் ஜூலி கோசெக் தெரிவிப்பு



இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று மக்கள் விருப்பத்துடன் புதிய அரசாங்கம் அமையப்பெற்ற பின்னர் தனது திட்டங்கள் குறித்து விவாதிப்பதற்கு தயார் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டங்கள் இலங்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கண்டுள்ளன. எனினும் இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்காக இந்த முன்னேற்றத்தை பாதுகாப்பது அவசியம்என சர்வதேச நாணயநிதியத்தின் தகவல் தொடர்புதுறை இயக்குநர் ஜூலி கோசெக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின்எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளபடி ஈஎவ்எவ் திட்டம் தொடர்பான கடன் பேண்தகுதன்மை மதிப்பீட்டை மீள்பரிசீலனை செய்ய அல்லது மீளாய்வு செய்ய முடியுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்கால தேர்தலை பொறுத்தவரை அதனை இலங்கை மக்களே தீர்மானிக்கவேண்டும் என தெரிவித்துள்ள அவர், சர்வதேச நாணயநிதியத்தின் பார்வையிலிருந்து பார்க்கும் போது இந்த திட்டம் குறிப்பிடத்தக்க விடயங்களை சாதித்துள்ளதாக கருதுகின்றோம் என தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு இந்த திட்டத்தை பாதுகாப்பது அவசியம், 6➤

# அநுரகுமார ஆட்சிக்கு வந்தால் நாட்டில் இரத்த ஆறுதான் ஓடும்

## ரணிலை ஆதரிக்கும் பரப்புரையில் தினேஷ் எச்சரிக்கை



"மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொலையாளி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகவாதி. இருவரில் எவர் வேண்டும் என்பதை எதிர்வரும் 21ஆம் திகதி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். தவறியேனும் அநுரகுமார ஆட்சிக்கு வந்தால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறுதான் ஓடும்." - என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கெஸ்பேவவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் ஆதரவைக் கோரியுள்ளார். மக்களும் பெருமளவில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றார்கள். நாடாளுமன்றத்தில் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களினதும் நம்பிக்கையை ஜனாதிபதி உறுதி செய்திருக்கின்றார்.

இதுவரையில் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே முன்மொழிந்திருக்கின்றார். நாட்டின் கல்வித்துறைக்கும் கல்வியல் கல்லூரி போன்ற விடயங்களை அவர் அறிமுகப்படுத்தினார். இவ்வாறு இலங்கையில் புதுமையான முயற்சிகளை சாத்தியமாக்கிக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே முடியும்.

தவறியேனும் இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சிக்கு வந்தால் மூன்று எம்.பிக்களை வைத்துக்கொண்டு ஜனநாயக ஆட்சி செய்யும் இயலுமை அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இல்லை.

6➤

# கனடாவிலிருந்து காணி வாங்க வந்தவரிடம் 85 லட்சம் அபகரிப்பு

கனடாவில் இருந்து யாழ்ப்பாணத்தில் காணி வாங்கு சென்றவரின் 85 இலட்ச ரூபாய் பணம் காணி தகரால் அபகரிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட நபர் ஒருவர் கனடாவில் புலம்பெயர்ந்து வசித்து வருகிறார். இந்நிலையில் புலம்பெயர் தமிழர் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார்.

யாழில் காணி வாங்க முற்பட்டவருக்கு, தெல்லிப்பழை பகுதியில் காணியை கிளிநொச்சி பகுதியை சேர்ந்த காணி தரகர் ஒருவரே அடையாளம் காட்டி , காணி உரிமையாளருடன் பேச்சுக்களையும் நடத்தியுள்ளார்.

அதனை அடுத்து காணியை கொள்வனவு செய்வதற்கு 85 இலட்ச ரூபாய் பணத்தினை ரொக்கமாக தயார் செய்திருந்த நிலையில், அந்த பணத்தினை கனடா வாசி தன்னுடன் வைத்திருந்தார்.

புலம்பெயர் தமிழர் அசந்த நேரம் பார்த்து , காணி தரகர் 85 இலட்ச ரூபாய் பணத்தினை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளார். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் காணிமோசடிகள் அதிகரித்துள்ளதாக ஏற்கனவே யாழ்ப்பாண பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பியால் உருவாக்கப்பட்ட ஒரு பொம்மையே அநுரகுமார

## பொதுமக்கள் ஐக்கிய உள்நாட்டுக் கட்சி சாடல்

இலங்கையின் முதல் பொருளாதாரக் கொலையாளி மக்கள் விடுதலை முன்னணி ஆகும். அவர்கள் 1989 இல் நாட்டில் ஒரு பயங்கரவாதக் கிளர்ச்சியை உருவாக்கினர். நாட்டின் பொருளாதாரம் முடங்கியது. இளைஞர் சமூகம் கொல்லப்பட்டது." - என்று பொதுமக்கள் ஐக்கிய உள்நாட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் இந்திக்க எஸ். ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய மக்கள் சக்தியில் இருந்து முன்வந்துள்ளவர் ஜே.வி.பியினால் உருவாக்கப்பட்ட அநுரகுமார திஸாநாயக்க என்ற பொம்மை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து முன்னிறுத்தியுள்ள சஜித் பிரேமதாஸ, அரசியல் குடும்பத்தால் வளர்க்கப்பட்டவர் என்றே கூற வேண்டும். அவர்களால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

எனவே, இந்த நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. அவருக்கே அனைத்து இன மக்களும் எதிர்வரும் 21ஆம் திகதி வாக்களிக்க வேண்டும்." - என்றார்.

# மேலும் 9 நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர் வருகை

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 9 நாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க அவர்கள் வருகை தந்துள்ளதாக அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அவர்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதில் சார்க் வலய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ரஷ்ய கண்காணிப்பாளர்களும் இந்த கண்காணிப்பு குழுக்களில் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பி ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே இலங்கை வந்துள்ளார்கள்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# சஜித்துக்குத்தான் சகலரும் பேராதரவு

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் சஜித் பிரேமதாஸவுக்குத்தான் பெருவாரியான ஆதரவு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் முதல் சுற்றிலேயே 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்ககளைப் பெற்று விடுவார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு இல்லை. ரணிலாலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. அனைத்து இன மக்களின் ஆதரவும் சஜித்துக்குத்தான் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால் 23 அல்லது 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும். இடைக்கால அரசொன்று ஸ்தாபிக்கப்படும். ஆளுநர் பதவிகளில் மாற்றம் செய்யப்படும்." - என்றார்.

# வடக்குப் பக்கம் ஜே.வி.பி. தலைகாட்டவே முடியாது

## சஜித் அணி காட்டம்

*"இலங்கை - இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாண சபை முறைமைக்கு எதிராக அன்று போர்க்கொடி தூக்கிய ஜே.வி.பியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்குக் கேட்பதற்குரிய உரிமை கிடையாது. ஆனால், எமக்கு அதற்குரிய உரிமை உள்ளது. ஏனெனில் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்கும்கட்சிதான்எமது கட்சியாகும்."–என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,*

*"13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக மக்களைக்கொன்ற கட்சிதான்ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களையும் ஜே.வி.பி. கொன்றது. இந்திய மருத்துகளைக் கொண்டு வந்த அதிகாரிகளையும் இந்தக் கட்சி கொலை செய்தது. இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்குமாறு அழைப்பும் விடுத்தது. எனவே, இந்தக் கட்சியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்கு கேட்கும் உரிமை கிடைக்காது.*

*வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்திகளைச் செய்யக்கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸ தான் என்பதை அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.*

*வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.*

*இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர். அதேபோல்வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களும் சஜித்துக்கு பேராதரவு வழங்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். குறித்த பகுதிகளுக்குச் சென்றபோது சஜித்துக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது." –என்றார்.*

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பொருளாதாரத்தை நிலைப்படுத்த இன்னும் நான்கு வருடங்கள் தேவை

## அதற்காகவே மக்கள் ஆணைய கேட்பதாகச் சொல்கிறார் ரணில்




திசைகாட்டி நாடு முழுவதும் வெறுப்பை விதைத்து வருவதாகவும், வெறுப்பு என்ற போர்வையின் ஊடாக அதிகாரத்தை பெற்றால் நாட்டுக்கு என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கெஸ்பேவவில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, "பொருளாதாரத்தை நிலைப்படுத்த வேண்டும். அதற்கு இன்னும் நான்கு வருடங்கள் தேவைப்படும். அதற்காகவே மக்களின் ஆணை கேட்கிறேன். மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது. மக்களுக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை.

இனிவரும் காலங்களில் 'இயலும் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் வாழ்க்கைச் சுமையைக் குறைத்து, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவோம். புதிய முதலீடுகளை கொண்டு வருவோம். மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களை வழங்குவோம்.

அநுரகுமார திசாநாயக்கவும் சஜித்தும் என்ன சொல்கிறார்கள்? அவர்கள் எம்மோடு தொடர்புபடவில்லை என்கின்றனர்.

எம்மை விரட்டி விட்டு அதிகாரத்தை அவர்களிடம் தருமாறு கேட்கிறார்கள். அவர்களுக்கு வாக்களிப்பதால் என்ன நடக்கும்? ரூபாயின் பெறுமதி 420 வரையில் அதிகரிக்கும். 370 அதிகரிப்பை தாங்க முடியாத மக்களால் 420 ஐ தாங்க முடியுமா?

தேசிய மக்கள் சக்தியின் வரவுசெலவு திட்ட இடைவெளி 400 மில்லியன் ரூபாயாகக் காணப்படுகிறது. அதனை செயற்படுத்தினால் டொலரின் பெறுமதி 470 ரூபாய் வரையில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அவ்வாறு நடந்தால் சர்வதேச நாணய நிதியம் உடன்படிக்கைகளிலிருந்து விலகிச் செல்லும்.

அதிகாரத்தை மட்டும் இலக்கு வைத்து செயற்படுகின்றனர். வரியைக் குறைத்தால் என்ன நடக்கும் என்பதையே கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் பார்த்தோம். 2020 களில் நான் உண்மையை சொன்னதால் நான் தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் வரவேண்டிய நிலைமை உருவாகியது.

எமது வரவு செலவு திட்ட யோசனைகளை நான் வெளியிடுகிறேன். அநுரவும் மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும். இன்று என்னை விவாதத்திற்கு அழைக்கிறார். நான் விவாதத்திற்குத் தயாராகவே இருக்கிறேன். முதலில் அவர்கள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை முன்னெடுப்பார்களா அல்லது இறக்குமதியில் தங்கியிருப்பார்களா என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இது குறித்து சர்வதேச நாணயநிதியத்துடன் காணொளி மூலம் பகிரங்கமாக விவாதம் நடத்தவும் நான் தயாராக இருக்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார்.




# சஜித்துக்காக பரப்புரையில் இறங்கிய அவரது மனைவி

## மன்னாரில் மக்களுடன் சந்திப்பு

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து அவரது மனைவி ஜலனி பிரேமதாச மன்னார், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் அழைப்பின் பேரில் மன்னார் முசலி பொற்கேணி பிரதேசத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்த ஜலனி பிரேமதாச மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் மன்னார் அளக்கட்டு பொற்கேணியில் இடம்பெற்ற பெண்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிர் அமைப்புகள், பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டிருந்தனர்.




# முஸ்லிம் அமைப்புகள் ரணிலுக்கே ஆதரவு

## முஸ்லிம் இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம் அமைப்புகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு என்று முஸ்லிம் இடதுசாரி முன்னணியின் பொதுச்செயலாளர் எம்.ஆர்.எம்.பைசால் தெரிவித்தார்.

கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைய காலகட்டத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம், பேர்கர் என அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் எமது நாட்டில் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். ஏனெனில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை நெருக்கடியில் இருந்து வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் எமது மக்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற கனவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணுகின்றார். கொழும்பு பிரதேசத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம், பேர்கர் மக்களைப் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களும் வாழ வேண்டும் என்பதே அவரின் எண்ணமாகும்.

தற்போது அனைத்து முஸ்லிம் அமைப்புகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்றன என்றே கூற வேண்டும்." – என்றார்.





# திருமலையில் தமிழர் தாயகத்தை இலக்கு வைக்கும் நில அபகரிப்பு!

## அதிர்ச்சியளிக்கும் தகவல்களை உள்ளடக்கி வெளியாகியிருக்கும் புதிய ஆய்வு அறிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 57 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் விவாதிக்கப்பட்டுவரும் இந்த வேளையில், “திருகோணமலை ஆக்கிரமிப்பின்கீழ்: இலங்கையின் தமிழர் தாயகத்தை இலக்கு வைக்கும் நிலஅபகரிப்பு” என்ற ஒக்லாண்ட் நிலையத்தின் புதிய ஆய்வு அறிக்கையானது திருகோணமலையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலங்கள் மோசமாக அபகரிக்கப்பட்டுவருவது பற்றிய அதிர்ச்சியளிக்கும் தகவல்களை வெளியிட்டுள்ளது.

சுதந்திரம் கிடைத்த நாள் முதல் அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு குடியேற்றங்கள் நிறுவப்பட்டுள்ள நிலையில், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த நாள் முதல் இந்த குடியேற்றங்கள் அதிகரித்துள்ளமையையும், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வலுவற்றவர்களாக்கும்பொருட்டு தொடர்ச்சியான அரசாங்கங்கள் மற்றும் இராணுவம் ஆகியவை கையாண்டுவரும் பல்வேறு உத்திகளையும் இந்த புதிய அறிக்கை வெளிப்படுத்துகின்றது.




“யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவ ஆட்சியின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்துவருகின்றது “ என்று ஒக்லாண்ட் நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் அனுராதா மிட்டால் தெரிவித்துள்ளார். “ வடக்கு- கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல்செயும் அதேவேளை, அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அவர்களின் சரித்திரம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை அழிப்பதை இந்த நில அபகரிப்பு முன்னெடுப்புக்கள் இலக்குவைக்கின்றன” என்றும் மிட்டால் மேலும் தெரிவித்தார்.

இந்த நில அபகரிப்புக்கள் காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் தற்போது 27 சத வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் அந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 36 சதவீதத்தை தம்வசம் வைத்துள்ளனர். 50 சதவீதத்துக்கும் அதிகமான நிலப்பரப்பு (41, 164 ஏக்கர்) அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 10 வருடங்களில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு மோசமான நில அபகரிப்பை சந்தித்துள்ளது. நீர்ப்பாசன திட்டங்கள், துறைமுக நவீனமயமாக்கல், வலு உற்பத்தி மற்றும் உல்லாசப்பயண மேம்படுத்தல் ஆகியவை உட்பட “அபிவிருத்தி” என்ற போர்வையின் ஒரு பகுதியாக தமிழ், மற்றும் சிங்கள மக்களின் நிலங்களை அபகரிக்கும் “சிங்கள மயமாக்கல்” என்று அழைக்கப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த நில அபகரிப்பு நடைபெற்றுவருகின்றது. தொல்லியல் திணைக்களம், வன இலாகா, மகாவலி அதிகாரசபை மற்றும் உல்லாச அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவை உட்பட பல்வேறு அரச நிறுவனங்கள் இந்த சிங்களமயமாக்கல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ள.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதானது பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கும் குடித்தொகை பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழ்மற்றும் முஸ்லிம் மக்களின் கலாசார சின்னங்களை அழிப்பதற்கும் ஏது செய்கின்றது. 2009 ஆம் ஆண்டில் இருந்து குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 3887 ஏக்கர் நிலப்பரப்பில் 26 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு, அன்றைய அரசாங்கம், நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் இராணுவம் மற்றும் பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய 11 பேர் கொண்ட “ கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவத்துக்கான ஜனாதிபதி செயலணி குழு” ஒன்றை அமைத்திருந்தது.

மத ரீதியான நில அபகரிப்புகள் பற்றிய ஆவணப்படுத்தலின் பின்னர், 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், அமெரிக்காவின் சர்வதேச மத சுதந்திர ஆணைக்குழு ( ருவைநன ளுவயவநள ஊழஅஅளைளழைெ ழெ ஐவெநசயெவழையெட சுநடபைழைரள குசநநனழஅ ) மத சுதந்திர மீறல்களுக்காக இலங்கையை விசேட கண்காணிப்பில் சேர்க்குமாறு பரிந்துரை செய்திருந்தது. “பௌத்த விகாரைகளை மற்றும் மடாலயங்களை கட்டுவதற்கும் விஸ்தரிப்பதற்கும் பௌத்த பிக்குகள் அனுமதிக்கப்படும் அதேவேளை இந்த பகுதிகளில் தமிழ் மக்களின் புராதன இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதுடன் அங்கு மக்கள் வழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கப்படுகின்றது” என்று மிட்டால் மேலும் கூறினார்.

ஒக்லாண்ட் நிலையத்தின் இந்த அறிக்கை மற்றும் அதன் முன்னைய அறிக்கைகளில் நன்கு ஆவணப்படுத்தப்பட்டபடி இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மேலாக இனத்துவ ஆதிக்கத்தை (நவாழெஉசயவளை னழஅயைெஉந ) நிலைநாட்டுவதற்காக இலங்கை அரசு அதன் இராணுவ ஆக்கிரமிப்பை பயன்படுத்துகின்றது.

இலங்கை இராணுவத்தின் 7 பிராந்திய தலைமையகங்களில் ஐந்தை வடக்கு மற்றும் கிழக்கில் வைத்திருப்பதன் மூலம், இந்த மாகாணங்கள் தொடர்ந்தும் உச்சளவில் இராணுவ மயமாக்கப்பட்டு காணப்படுகின்றன. உச்சளவில் காணப்படும் இராணுவ பிரசன்னம் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கும் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கும் நிலங்களை அபகரிப்பதற்கும் உதவுகின்றது. மிகப்பெரும் அளவில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களிடம் இருந்து நிலம் அபகரிக்கப்பட்டுள்ளமை ஆயிரக்கணக்கான மக்களை பாதித்துள்ளது. வளம்மிக்க விவசாய மற்றும் கடலோர நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளமை காரணமாக அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரம் இல்லாமல் போயுள்ளது. தமது பகுதிகளுக்கு மீண்டும் திரும்பி அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில், தமது நிலங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யும் மக்கள் பல்வேறு சட்ட தடங்கல்களையும் மற்றும் குடியேற்றப்பட்ட மக்களிடம் இருந்து அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர்.

“எமது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. நாம் விவசாயம் செய்யவும் முடியாது மீன் பிடிக்கவும் முடியாது. இந்த நிலைமை தொடருமானால், எமது வழித்தோன்றல்கள் இந்த கிராமத்தில் தொடர்ந்து வசிக்கும் சாத்தியம் இருக்காது” என்று குச்சவெளியை சேர்ந்த ஒரு மீனவர் கூறினார். சிங்கள அரசாங்கத்தின் அடக்குமுறையின் மத்தியிலும், துணிச்சலுடன் நீதிக்காக குரல் எழுப்பும் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் வாக்குமூலங்களை “திருகோணமலை ஆக்கிரமிப்பின் கீழ்” என்ற இந்த அறிக்கை உள்ளடக்கியிருக்கின்றது.

“உள்நாட்டு யுத்ததின் போதும் இன்றுவரையிலும் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகாரம் ஆகியவற்றுக்கான எந்தவொரு சாத்தியத்தையும் இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள தீவிரம் அடைந்துள்ள இலங்கையின் இனரீதியான நடவடிக்கைகள் (நவாழெஉசயவளை ிசயஉவளைநள) இல்லாமல் செய்வதுடன் ஏற்கனவே இருக்கும் துன்பம், அநீதி, பகையுணர்வு ஆகியவற்றை மேலும் அதிகப்படுத்துகின்றன.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலம் மற்றும் வாழ்வு ஆகியவற்றுக்கான அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மதித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இராணுவ மயமற்றதாக ஆக்க ஆரம்பித்தால் அன்றி, சமாதானமும் நல்லிணக்கமும் சாத்தியம் ஆகாது “ என்று மிட்டால் மேலும் குறிப்பிட்டார்.

# அலிஸாஹிர் மௌலானா மீதான ஒழுக்காற்று விசாரணைக்கு குழு

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நவடிக்கை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸ ாஹிர் மௌலானா அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவை ஏன் கட்சி உறுப்புரிமையில் இருந்து விலக்கக்கூடாது என்ற காரணங்களை வினவி விசாரணை செய்வதற்காக கட்சியினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு முன்னிலையில் நேரடியாக ஆஜராகி தன்னுடைய விளக்கத்தை தருமாறு அலிஸாஹிர் மௌலானாவை, தான் கடிதம் மூலம் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கிய இடைக்காலதடை உத்தரவானது பாராளுமன்ற உறுப்பினர் அலிஸ ாஹிர் மௌலானா அவர்களுக்கு எதிரான விசாரணை கட்சி யாப்பின் படியும் இயற்கை நியதியின் அடிப்படையிலும் செய்வதற்கு எந்த தடையையும் ஏற்படுத்தாது என்ற விடயம் இவ்வழக்கு கடந்த 11ஆம் திகதி நீதிமன்றத்தில் வந்தபோது தெளிவுபடுத்தப்பட்ட பின்னணியிலேயே இந்த விசாரணை நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அறிவித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவராகவும் அக்கட்சி மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயற்பட்டு வந்த அலிஸாஹிர் மௌலானா கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதுடன் அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்றுள்ளார்.

இந் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து அவர் இடைநிறுத்தப்பட்டதை சவாலுக்குட்படுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இதனை பரிசீலித்த நீதிமன்றம் அமைச்சர் அலிஸாஹிர் மௌலானாவை கட்சியில் இருந்து இடைநிறுத்தியமைக்கு எதிராக முறையே செப்டம்பர்-11 வரையும் செப்டெம்பர்-25 வரையும் இடைக்கால தடையுத்தரவு விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஷாக் ரஹ்மான் ஆதரவாலேயே ராஜபக்ஷ கரங்கள் பலப்பட்டன

## அனுராதபுரத்தில் ரிஷாட் பதியுதீன்



'முஸ்லிம்கள் இல்லாவிட்டாலும் முஸ்லிம் எம்.பிக்கள் இருக்கிறோம்' என கோட்டாபய ராஜபக்ஷவின் அத்தனை அநியாயங்களுக்கும் தம்மை விட்டுச்சென்ற எம். பிக்கள் துணைபோனதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து அனுராதபுரத்தில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் குறிப்பிட்டதாவது,

"நீண்ட நாட்களுக்குப் பின்னர் இவ்வூரில் பேசக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக முதலில் இறைவனுக்கும் இரண்டாவதாக ஏற்பாட்டாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

நமது வாக்குகளால் பாராளுமன்றத்துக்கு வந்த இஷாக் ரஹ்மான், எமது சமூகத்துக்கு எதிரான கோட்டாபயவின் கொடூரச் செயல்களைக் கை கட்டிப் பார்த்து நின்றார். அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு இவர்கள் ஆதரவளித்ததால்தான், ராஜபக்ஷக்களின் கொடிய கரங்கள் மேலோங்கின.

அரசியலில் அவரை ஆதரிக்கவில்லை என்பதற்காக எமது சமூகத்தைப் பழிவாங்கினர். முஸ்லிம்களின் சொத்துக்களை அழித்தனர். வியாபார நிலையங்களுக்குத் தீ வைத்தனர். கொரோனா ஜனாஸாக்களை எரித்து சந்தோசம் அடைந்தவர்களுடனேயே, இஷாக் ரஹ்மான்இணைந்துள்ளார். இதனால்தான், எமது கட்சியின் மூன்று எம்.பிக்களையும் நீக்கினோம். இவர்களை ஒருபோதும் இணைக்கப் போவதில்லை. எனவே, இவர்களைத் தோற்கடிக்க ஒன்றுபடுங்கள்.

நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாச, தனது தந்தையைப் போன்று நேர்மையானவர். ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவி, இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கினார். ஜனசவியத் திட்டத்தின் மூலம் ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வளித்தார்.

எனவே, சஜித்தின் வெற்றிக்கு உறுதுணையாகச் செயற்படுங்கள். "இன்ஷா அல்லாஹ்" வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் சந்திப்போம்" என்று கூறினார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# பிரேமதாஸ இன்று இருந்திருந்தால் அவரும் ரணிலை ஆதரித்திருப்பார்

## இப்படி தலதா கூறுகின்றார்

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இப்போது உயிருடன் இருந்திருந்தார் என்றால் அவரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளித்திருப்பார் என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

கெஸ்பேவவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தலதா அத்துகோரல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்து அமைச்சுப் பதவி வாங்க நான் விரும்பவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எமக்கு அரசியல் கற்பித்தார். இன்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பலர் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ள முடியுமா என்ற சந்தேகத்துடன் இருக்கின்றார்கள். நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எமது தலைவராவார்.

ரணசிங்க பிரேமதாஸ இப்போது உயிருடன் இருந்திருந்தார் என்றால் அவரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளித்திருப்பார். அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அவரைப் பாதுகாத்தார். எனவே, பிரேமதாஸவின் குடும்பத்தார் நன்றி மறந்தாலும் அவர் உயிரோடு இருந்திருந்தால் நன்றிக்கடன் செலுத்தியிருப்பார்.

எனவே, பொருளாதார நெருக்கடியால் கஷ்டப்பட்ட மக்களும் அந்தக் கஷ்டங்களுக்கு முடிவு கட்டிய தலைவரான ஜனாதிபதி ரணிலை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும்." - என்றார்.







# புலமை பரிசில் பரீட்சை மாணவருக்கு அறிவிப்பு

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் 15ஆம் திகதி நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நேற்று நள்ளிரவு முதல் நாடு முழுவதும் உள்ள ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கு வினாத்தாள்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ந்தாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு 323,879 பரீட்சார்த்திகள் தகுதி பெற்றுள்ளதுடன், அவர்கள் நாடளாவிய ரீதியில் 2,849 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

மேலும், விசேட தேவையுடைய மாணவர்களுக்காக 7 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், மஹரகம வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வரும் சிறுவர்கள் அங்கிருந்து பரீட்சைக்கு தோற்றுவதற்காக பரீட்சை நிலையமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பகுதிகளைக் கொண்ட புலமைப்பரிசில் பரீட்சையின் இரண்டாம் பகுதி வினாத்தாள் முதலில் வழங்கப்படும். இது காலை 9.30 முதல் 10.45 வரை நடைபெறும். அதன் பின் முதலாம் பகுதி வினாத்தாள் காலை 11.15 மணிக்கு ஆரம்பமாகி ஒரு மணிநேரம் இடம்பெறும்.

### கஜேந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, குறித்த நடவடிக்கைக்கு பொலிஸார் இடையூறு விளைவித்துள்ளதுடன் துண்டுப்பிரசுர விநியோகத்தினை இடைநிறுத்துமாறு தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கும் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு பிரச்சாரம் செய்வது சட்டவிரோதமானது என எச்சரித்த பொலிஸார், அவரை விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

### தமிழரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த ஆட்சி காலத்தில் ஏற்படுத்திய பல்வேறு வேலை திட்டங்கள் தொடர்பிலும் தமது நிலைப்பாடு தொடர்பிலும் இதன் போது அங்கஜன் இராமநாதன் தெளிவு படுத்தினார்.

நாமல்ராஜபக்ஷ நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தமை தொடர்பிலும் அவர் தொடர்பான சில கேள்விகளுக்கும் பதிலளித்தார்

### அநுரகுமார

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவே, அவர் தன்னிச்சையான அதிகாரங்களுடன் செயற்பட முயற்சிப்பார். ஆகவே, நாட்டில் ஆட்சி அதிகாரத்தைச் செயற்படுத்தக்கூடிய நாடாளுமன்ற அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது.

இம்முறை பெருமளவான புதிய வாக்காளர்கள் பதிவாகியிருக்கும் நிலையில் நாட்டின் எதிர்காலத்தைச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்." - என்றார்.

### புதிதாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல தேர்தலின் பின்னர் அரசாங்கத்துடன் மூன்றாவது மறுஆய்வு குறித்து பேசுவோம்,எனஅவர் குறிப்பிட்டுள்ளார். மக்களின் தெரிவை அடிப்படையான முடிவின் பின்னர் நாங்கள் அதனுடன் இணைந்து செல்ல தயாராக உள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பலாச்சோலையில் விவசாயிகளுக்கான வயல் பாடசாலையின் அறுவடை விழா

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரீ.பவிலேகா தலைமையில் பலாச்சோலை கிராமத்தில் விவசாயிகளுக்கான வயல் பாடசாலை அறுவடை விழா நேற்று நடைபெற்றது.



இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் மு.பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அத்துடன் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவஷரூபன், இவ் வயல் பாடசாலை திட்டத்தில் பெரிதும் அனுபவம் வாய்ந்த திருகோணமலை மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் எஸ்.சர்வேஷ்வரராசா, மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலக உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சங்கீதா, பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலக பாடவிதான உத்தியோகத்தர்கள், தெற்கு வலய விரிவாக்கல் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். நஞ்சற்ற இயற்கை வீட்டுத் தோட்டம் தொடர்பான களப்பாடசாலையில் 15 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான 7 விதமான மரக்கறி பயிர்களின் விதை உட்பட்ட உள்ளீடுகள் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்டு தொடர்ந்து 12 வாரங்கள் அவர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகள் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு செய்கை பண்ணப்பட்ட வீட்டுத் தோட்டத்தின் அறுவடை வெற்றிகரமாக நடைபெற்றது. இதன்போது விவசாயிகளில் கலை நிகழ்ச்சிகளும் அவர்களது திறமை மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அரங்கேற்றப்பட்டன.

# களுவாஞ்சிக்குடியில் கரையோர பாதுகாப்பு, தூய்மைப்படுத்தல்



கரையோர பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் நோக்குடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது, கடல் சூழல் அதிகார சபை மற்றும் "ஜனதாக்சன்" அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வானது களுவாஞ்சிகுடி கிராம சேவகர் பிரிவின் கடற்கரையோரங்களை அண்டிய பிரதேசங்களில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்ச்சித்திட்டமானது கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் அவர்களின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் கிழக்கு கரையோரங்களை தூய்மையாக பேணுதல் எனும் திட்டத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதேச பொது மக்களுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடல் சார் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் கரையோரங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

மேலும் இந் நிகழ்வினை பிரதேச செயலக கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான யோ. நிசந்தராசன் மற்றும் ஆ. ஜெகஷரூபன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# களுதாவளை தேசிய பாடசாலை 12 தங்கங்களை வென்று சாதனை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) 12 தங்கம் உட்பட 26 பதக்கங்கள் பெற்று 6 புதிய கிழக்கு மாகாண சாதனையுடன் 31 மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண மட்ட போட்டிகளின் 12 தங்கப்பதக்கங்களையும், 05 வெள்ளிப்பதக்கங்களையும்,09 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தம் 26 நிகழ்வுகளில் வெற்றி பெற்று 95 புள்ளிகளுடன் கிழக்கு மாகாணத்தில் அதிக தங்கப் பதக்கங்களையும், அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட பாடசாலையாக சாதித்துள்ளது. குறிப்பாக ஆண்கள் பிரிவில் 51 புள்ளிகளையும், பெண்கள் பிரிவில் 44 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது.

இம்முறை 06 புதிய மாகாண சாதனைகள் இம்மாணவர்களால் படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கிளிநொச்சியில் விற்பனை கண்காட்சி

கிண்டர்நோத்ஹில்பெ (முவே) நிதியுதவியுடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் ஏற்பாட்டில் விற்பனை கண்காட்சி இன்று நடைபெற்றது. “வலிமையான பெண்களுக்கு வலுவூட்டும் கரங்கள்” எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் காலை 8.30மணிக்கு ஆரம்பமானது. குறித்த விற்பனை கண்காட்சியினை கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

சுய உதவிக் குழு பெண்களை வலுப்படுத்தும் நோக்கில், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களை சுமார் 40 விற்பனை கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தியிருந்தனர்.

உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மக்கள் மத்தியில் இலகுவாக கொண்டு சென்று உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குறித்த விற்பனை கண்காட்சி இன்று மாலை 5.00மணிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(113)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2024இல் வெளியிடப்பெற்றது.